**கவனிக்க.**- *03.08.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1771 - 2012 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2012.08.10**

*1771 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1000 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1009 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, புரட்டாதி மாதம் 17 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஆடி மாதம் 24.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை மேற்கு | கன்னங்குடா பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் மண்முனை மேற்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மட்டக்களப்பு. |

8-301

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, புரட்டாதி மாதம் 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஆடி 23.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | கொத்மலை | உடப்பன பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் கொத்மலை பிரிவில் விவாகப் (பொது /கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா. |
| நுவரெலியா | அம்பகமுவ | ஹற்றன் திக்கோயா நகரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா. |

8-302

---

### சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

**சமையற்காரர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான பரத்தவில் அமைந்துள்ள சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் நிலையத்தில் தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்ற சமையற்காரர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுவான தகைமைகள் :**

(அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பெண் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) சிறந்த நடத்தையை உடையவராக இருத்தல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள்.**- கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு பாடங்களுக்கு குறையாது ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **தொழில்சார் தகைமைகள்.**- தேசிய பயிலுனர் சபையின்கீழ் அல்லது தொழில் பயிற்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவகத்திடமிருந்து உணவு சமைத்தல் தொடர்பான தேசிய தொழில் தகைமைகளின் (NVQ) இரண்டாம் அல்லது மூன்றாம் மட்டத்திற்கு குறையாத பாடநெறியொன்றை கற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் இரண்டு வருட சேவை அனுபவம்.

4. **சம்பளம்** (மாதாந்தம்).- ரூ. 12,210+அரசாங்க அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

5. **வயதெல்லை.**- 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

6. **சேவைசார் நிபந்தனைகள்.**- (அ) ஒரு வருட காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ;

(ஆ) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் அ. சே. ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ள நடவடிக்கை ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப் பட்டுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையனவாகும். மேலும், தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் தற்போது வெளியிடப்பட்டுள்ளதும், எதிர்காலத்தில் வெளியிடப்படக்கூடியதுமான கட்டளைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை.**- கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் மூலம்.

8. **விண்ணப்பிக்கவேண்டிய முறை.**- (அ) மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஏ4 அளவிலான தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தாமாக தயார் செய்துகொள்ளும் விண்ணப்பப்படிவத்தை 2012.08.15 ஆந் திகதிக்கு முன்னர் ''ஆணையாளர், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், இல. 150, நாவல வீதி, நுகேகொடை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். உரிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பரிசீலனை செய்து பார்ப்பதற்காக தாமே சான்றுப்படுத்திய பிரதிகளையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சமையற்காரர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2012'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

9. **தவறான தகவல்களை வழங்குதல்.**- யாராயினுமொரு விண்ணப்பதாரர் நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவரென்பது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் தெரியவரும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படும். நியமனம் பெற்ற பின்னர் தகுதியற்றவரென அல்லது உண்மைக்கு முரணான தகவல்களைச் சமர்ப்பித்திருப்பதாக அல்லது உண்மையான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் சேவை நீக்கம் செய்யப்படுவார்.

10. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் தொடர்பான விடயங்கள் அல்லது இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் எழும் சிக்கல்கள் சம்பந்தமாக நன்நடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

யமுனா பெரேரா,
ஆணையாளர்.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,
இல. 150, நாவலை வீதி,
நுகேகொடை.
2012, யூலை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்**

சமையற்காரர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :
   (அ) சிங்களம்/தமிழில் :----.
   (ஆ) ஆங்கில மொழியில் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. தற்போது வசிக்கும் முகவரி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பிறந்த திகதி :----.
6. திருமணமானவரா?/திருமணமாகாதவரா என்பது :----.
7. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை - ஆண்டு :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை - ஆண்டு :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

8. தொழில்சார் தகைமைகள் :----.
9. சேவைசார் அனுபவம் :----.

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

...................................................................... ஆகிய நான், இங்கு குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து சேவை நீக்கம் செய்யப்படவோ அல்லது கருணை அடிப்படையில் மாற்றீடாக வினைத்திறன் இன்மை காரணமாக சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும், பதவி வறிதாக்கிய ஒருவராக கருதப்படவில்லை என்றும் உறுதி செய்கின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் உண்மைக்கு மாறானவையென அல்லது தவறானவையென நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவரும் பட்சத்தில் தகுதியற்றவராக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை தெரியவரும் பட்சத்தில் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது தொழிலில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

திரு./ திருமதி/ செல்வி ........................................................ தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில் ................................. ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய அடிப்படையில் சேவையாற்றி வருவதாகவும், மேற்படி பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாதென்றும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

8-359

## துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வணிகக் கப்பல்துறைப் பணிப்பாளர் நாயக அலுவலக பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கான தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடத்துக்கான பதவிகள் :

| பதவிகள் | தரம் | வெற்றிடம் |
|---|---|---|
| துறைமுக அரச கட்டுப்பாட்டு அலுவலர்(பொறியியல்) | தரம் 1 | 01 |
| அரச கப்பல் அளவையாளர் | தரம் 1 | 01 |
| பரீட்சை பரீட்சகர் (பொறியியல்) | தரம் 1 | 01 |
| துறைமுக அரச கட்டுப்பாட்டு அலுவலர் (தளம்) | தரம் 1 | 01 |

மேற்குறிப்பிட்ட மூன்று பதவிகளுக்கும் ஏற்புடைய தகைமைகள் பின்வருமாறு :-

1. இந்த அறிவிப்பின்படி ''செயலாளர்'' எனக் குறிப்பிடப்படுவது ''துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர்'' ஆகும்.

2. ஆட்சேர்ப்பு செய்வதற்கான திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும்.

3. **தகைமைகளும் அனுபவமும் :**

| பதவிகள் | கல்வித் தகைமைகள் | அனுபவம் |
|---|---|---|
| துறைமுக அரச கட்டுப்பாட்டு அலுவலர் (பொறியியல்)<br>அரச கப்பல் அளவையாளர்<br>பரீட்சை பரீட்சகர் (பொறியியல்) | இலங்கை அல்லது பிரித்தானியா அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது ஹொங்கொங் அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து போன்ற நாடுகளில் அமைந்திருக்கும் அல்லது குறிப்பிட்ட சான்றிதழை ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையில் இலங்கையுடன் இருபக்க ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள நாடுகளில் அமைந்திருக்கும் கடற்துறை நிர்வாக நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட பிரதான பொறியியல் தகைமைச் சான்றிதழ் பெற்றிருத்தல். | கிலோ வாட் 3,000 இற்கு மேற்பட்ட சக்தியுடைய பிரதான இயந்திரத்தைக் கொண்ட கடற்பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றில் பொறியியலாளராக குறைந்தது இரண்டு வருடம் அனுபவம் இருத்தல். |
| துறைமுக அரச கட்டுப்பாட்டு அலுவலர் (தளம்) | இலங்கை அல்லது பிரித்தானியா அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது ஹொங்கொங் அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து போன்ற நாடுகளில் அமைந்திருக்கும் அல்லது குறிப்பிட்ட சான்றிதழை ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வகையில் இலங்கையுடன் இருபக்க ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள நாடுகளில் அமைந்திருக்கும் கடற்துறை நிர்வாக நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட கப்பல் முதல்வர் தகைமைச் சான்றிதழ் பெற்றிருத்தல். | கிலோ வாட் 3,000 இற்கு மேற்பட்ட சக்தியுடைய பிரதான இயந்திரத்தைக் கொண்ட கடற்பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றில் கப்பல் முதல்வராக இரண்டு வருடம் அனுபவம் இருத்தல். |

*தேக ஆரோக்கியம் மற்றும் நற்சான்று.-* விண்ணப்பதாரி நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான உடற்பலமும் தெளிவான பார்வையுடையவராகவும் இருப்பதோடு, நாட்டின் எப்பகுதியிலும்

சேவையாற்றுவதற்கான உடல் ஆரோக்கியமுடையவராக இருப்பதாக செயலாளர் திருப்திப்படும் பட்சத்திலாகும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி மருத்துவ பரிசோதனை ஒன்றிற்கும் உட்படுத்தப் படுவார்.

*ஏனைய தகைமைகள் :-*

(i) இலங்கைப் பிரசையாகவிருத்தல் ;

(ii) நன்நடத்தை மற்றும் உடலியல் ஆரோக்கியம் ;

(iii) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் கடைசி தினத்தன்று ஆட்சேர்ப்புக்கு அடிப்படையான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பதோடு அவ்வாறு பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவிக்கான அரசாங்க சேவை வர்த்தமானி இலக்கம் 6/2006 என்ற சம்பள வர்த்தமானியின்படி ரூ. 22,935-10 X 645-8 X 790-17 X 1,050 - ரூபா 53,555 (எஸ்எல்-1-2006) இற்கான சம்பளத்திட்டம் வழங்கப்படுவதோடு, அந்த சம்பளத்திட்டத்தின் 20 ஆம் படித்தரத்தில் வைத்து சம்பளம் வழங்கப்படும். (மாதாந்த சம்பளத்துக்கு மேலதிகமாக தொழில் தகைமைக் கொடுப்பனவும் வாகன எரிபொருள் கொடுப்பனவும் வழங்கப்படும்.)

5. **வயதெல்லை**.- 30 வயதுக்கு குறையாதவர். கூடிய வயதெல்லை 45 வயதுக்கு மேற்படாதவர். (தற்போது அரச சேவையில் உள்ளவர் களுக்கு கூடிய வயதெல்லை ஏற்புடையதல்ல.)

6. **ஆட்சேர்ப்பு முறை**.- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அமைக்கப்பெற்ற, நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு கீழ்க்குறிப்பிடப்பட்ட அமைப்பில் புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை முடிவுகளுக்கமைய இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

| புள்ளிகள் வழங்கப்படும் முறைகள் | வழங்கப்படும் புள்ளிகள் |
|---|---|
| (1) மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| (2) தொழில்சார் தகைமைகள் | 10 |
| (3) மேலதிக அனுபவம் | 30 |
| (4) துறைசார் பங்களிப்பு | 10 |
| (5) கணனி தேர்ச்சி | 15 |
| (6) நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

7. **சேவை நிபந்தனைகள்**.- (i) *தடைகாண் பரீட்சை*.- ஆட்சேர்ப்பு திகதியிலிருந்து 5 வருடத்தினுள் முதலாம் தடைக்கான பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். பரீட்சை முறை - எழுத்துப் பரீட்சை.

(ii) *இரண்டாம் உத்தியோக மொழித் தேர்ச்சி :*

| *மொழி* | *இருக்கவேண்டிய மொழித் தேர்ச்சி* |
|---|---|
| உத்தியோக மொழித் தேர்ச்சி | ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர் ஏனைய உத்தியோக மொழியில் சாதாரண தரத்திலிருப்பின் தகுதிகாண் காலப் பகுதிக்குள் தேர்ச்சிபெற வேண்டும். |
| ஏனைய உத்தியோக மொழித் தேர்ச்சி | இரண்டாம் உத்தியோக மொழித் தேர்ச்சி ஆட்சேர்ப்பு திகதியிலிருந்து 5 வருடத்தினுள் அரச நிர்வாக சுற்றறிக்கை 07/2007 இன்படி பூர்த்திசெய்யப்பட வேண்டும். |

(iii) இந்தப் பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியத்துக்கு உரித்தானதுமாகும். விதவைகள், அனாதைகள் நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்பட வேண்டும்.

(iv) இந்நியமனம் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலைக்கு உட்பட்டதாகும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளின் நியமனம் சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக் கேற்பவும், தாபனக்கோவையின் சட்ட ஒழுங்குகளுக்கு அமையவும் சேவையின் I ஆவது தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.

(vi) எல்லா ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் ஆட்சேர்ப்புக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைக்கும் மேற்கொண்டு ஆட்சேர்ப்பு விதிமுறை திருத்தங்களுக்கும் உட்பட்டதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) இவ்வர்த்தமானி அறிவித்தலின் கடைசியில் உள்ள மாதிரியை அறிவுறுத்தலுக்கேற்ப விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து பதிவுத்தபாலில் 2012, ஓகத்து 30 ஆந் திகதி யன்று அல்லது அதற்குமுன் "பணிப்பாளர் நாயகம், வணிக கப்பல்துறை பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், இலக்கம் 43/89, பிரிஸ்டல் பில்டிங், 1 ஆவது மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

(ii) தற்போது அரச சேவையில் உள்ள அதிகாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்கள தலைவரினூடாக அனுப்ப வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதாவது வேறுபாடுகள் அல்லது பரஸ்பரத் தன்மைகள் ஏற்படின் அதன்போது சிங்கள மொழி அதிகாரத்திற்குரிய மொழியாக கருதப்பட வேண்டும்.

மேற்படி அறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பெறப்பட வேண்டும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

டபிள்யூ. பேமசிரி,
செயலாளர்,
துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சு.

துறைமுகப் பிரிவு,
லேடின் பஸ்டியன் வீதி,
கொழும்பு 1,
2012, யூன் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு**

வணிகக் கப்பல் துறைப் பணிப்பாளர் நாயகம் அலுவலக
........................................... பதவி

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. பிறந்த திகதி :
   2012, ஓகத்து 30 ஆந் திகதியன்று வயது-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. இனம் :----.
5. கல்வித் தகைமைகள் :----.
6. தொழில் தகைமைகள் :----.
7. தொழில் மற்றும் பயிற்சி தொடர்பான விபரங்கள் :----.
8. தற்போதைய தொழில் :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என்பதை உறுதி மொழிகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது நியமனம் வழங்க முன்னர் உண்மையற்றது எனத் தெரியவந்தால் அதன் காரணமாக நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவர் ஆகவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இந்தத் தவறு தெரியவந்தால் எந்தவித நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8-360

---

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2012.11.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 27 x 2,160 - ரூபா 2,41,860.

மேலும், அரச உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுக்கும் அத்துடன் 12.12.2011 ஆந் திகதிய 31/11 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்துக்கு அமைவான கொடுப்பனவு களுக்கும் உரித்துடையவராவர்.

(அ) விசேட கடினக் கொடுப்பனவுகள் :

(1) நடவடிக்கை நடைபெறும் பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 1,200 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) நடவடிக்கை நடைபெறும் பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 5,600.

(இ) இலவச பயண வசதி ;

(ஈ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(உ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஊ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(எ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்** :

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 19-32 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த.(சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) *பௌதிக தகைமைகள்*.- *உயரம்* : 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

*மார்பு* : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) *தொழில் தகைமைகள்* :

(i) இலகுரக வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங் காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.-

* வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயங்களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அதுபோலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(ஈ) *பார்வை தொடர்பான தேவை*.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்*.- விண்ணப்பதாரர் விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்பத் தகைமை பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்பயிற்சிகளில் பங்குபற்றலாம், அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

*மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.*

- இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6. **தொழில்சார் பரீட்சை** :

6.1 இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின்கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :-

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்

(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்

(இ) வாகனப் பராமரிப்பு சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்

6.3 *தொழில்சார் பரீட்சை*.- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 25 புள்ளிகளும், வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப்புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர்.

**குறிப்பு**.- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி தகுதிகாண் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **வைத்தியப் பரிசோதனை :**

* முன்னுரிமைப் பட்டியல் மற்றும் திறமை ஒழுங்கிற்கு அமைவாக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப் படுவர்.

8. **பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரியின் நன்னடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப் பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரசகரும மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் இரண்டாம் மட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமன திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

10. **பதவியிலமர்த்தும் நியதிகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர் களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவி யில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 1952/2006 என்ற இலக்க 2006.10.19 ஆந் திகதிய 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதியுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் கால நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்ப மிடல் வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப் பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி ;

(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற் பிரதி.

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங் களை நேரடியாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/ கிராமசேவையாளர் பிரிவு :-----.

(எ) வதிவிட தொலைபேசி இலக்கம் :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.

(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.

(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.

(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :-----.

(ஆ) சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதி :-----.

(இ) தகைமையுள்ள வாகன வகுப்பு :-----.
(சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்பிரதியை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(I) -----.
(II) -----.

16. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் உப சேவையில் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை நிரந்தர பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் கடமையாற்றியுள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

17. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் :-----.

19. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் தொண்டர் படையினராக சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் :-----.

20. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக.) :-----.

21. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தமான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக : -----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

8-324

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### ஆயுர்வேத சமூக சுகாதார உதவி மருத்துவர் சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2012

இலங்கை ஆயுர்வேத சமூக சுகாதார உதவி மருத்துவர் சேவைக்குரிய மருத்துவ அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை யானது ஆயுர்வேத ஆணையாளரினால் கொழும்பில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. ஆயுர்வேத ஆணையாளரினால் இப்பரீட்சை நடாத்துவது தொடர்பில் விடுக்கப்படும் பணிப்புகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் அமைந்தொழுகக் கடமைப்பட்டவராவர்.

2. விண்ணப்பப்படிவத்தை இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட் டுள்ள மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரித்து அனுப்புதல் வேண்டும். குறித்த மாதிரிப்படிவத்திற்கமைவாக இலங்கை ஆயுர்வேத சமூகச் சுகாதார உதவி மருத்துவர் ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கேற்ப தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பங்களைப் பூரணப் படுத்தி தமது திணைக்களத் தலைவர் ஊடாக 30.08.2012 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பிரிவு, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்னை, மஹரகமை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆயுர்வேத சமூக சுகாதார உதவி மருத்துவர் சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் ஒரே முறையில் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 100 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒரு பாடத்துக்கு மட்டும் தோற்றுவதாயின் 50 ரூபா பெறுமதயான முத்திரையும் விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அதன் மீது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அம்முத்திரையை செல்லுபடி யற்றதாக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்பட மாட்டாது.

3. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் ஆயுர்வேதத் திணைக்களம் திருப்தியுறும் வகையில் தமது அடையாளத்தை நிரூபிக்க

வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

4. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாது பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதியன்றுக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அதுபற்றி அவர் பின்வரும் விபரங்களுடன் ''பதிவாளர், பரீட்சைகள் பிரிவு, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்னை, மஹரகமை'' என்னும் முகவரிக்கு உடன் அறிவிக்க வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;

(iii) விண்ணப்பதாரியின் முகவரி ;

(iv) விண்ணப்பப்படிவத்தை தபால் செய்த தபால் அலுவலகமும் பதிவுத் திகதியும்.

***பரீட்சைத் திட்டம் :***

(I) *நிதிப்பிரமாணம்.-* நிதிப்பிரமாணம் ii தொடக்கம் XIV வரையான அத்தியாயங்களின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் திரட்டிய நிதியத்தின் வருடாந்த செலவு மதிப்பீட்டுக்கு, வரவு மதிப்பீட்டுக்கு அமைவாக செலவு செய்வதற்கான அதிகாரத்தின்கீழ் செலவுக் கட்டுப்பாடு மற்றும் கணக்கு நடைமுறை, பெறுகைகள், கொடுப்பனவுகள் தொடர்பான பொதுவான ஆற்றல் பற்றி சோதிக்கும் எழுத்துமூல வினாத்தாள்

(II) *அலுவலக முறை.-* அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைத் திட்ட விதிக்கோவை தொடர்பான அறிவும் தாபன ஒழுங்குவிதிகள் தொடர்பான ஆற்றல் பற்றியும் சோதிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட எழுத்துமூல வினாத்தாள் :

(1) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் முதலாவது பகுதியின் III, IV, VII, XII, XIII, XXIV, XXVII, XXVIII அத்தியாயங்களும் அத்துடன்

(2) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் இரண்டாவது பகுதியின் XLVII, XLVIII அத்தியாயங்களும்.

பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பீ. எஸ். கே. ஆர். வீரக்கோன்,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

நாவின்ன,
மஹரகம,
2012.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத சமூகச் சுகாதார உதவி மருத்துவர் சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012**

சுட்டெண் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - S
தமிழ் - T [ ]
(பொருத்தமான எழுத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் தனி எழுத்துக்களில் எழுதவும்) (Mr./Mrs./Miss) :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) (திரு./ திருமதி/செல்வி) :----.

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் தனி எழுத்துக்களில் எழுதவும்) : ----.

4. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில் எழுதவும்) :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (ஆங்கிலத்தில் தனி எழுத்துக்களில் எழுதவும்) :----.

7. கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில் எழுதவும்) :----.

8. (i) தற்போது வகிக்கும் பதவி :----.
(ii) நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |

10. நீங்கள் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றி பின்வரும் பாடத்திலோ அல்லது பாடங்களிலோ சித்தியடைந்துள்ளீரா ? :

நிதிப்பிரமாணம்/தாபன விதிக்கோவை

அவ்வாறாயின் சுட்டெண்ணையும் சித்தியடைந்த ஆண்டையும் குறிப்பிடுக :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |

11. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையா ? :----.

பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாதவிடத்து ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

முத்திரை ஒட்டும் பகுதி :

முழுப்பரீட்சைக்காக 100 ரூபா பெறுமதியான முத்திரையும், ஒவ்வொரு பாடத்திற்கும் 50 ரூபா பெறுமதியான முத்திரையும் இங்கே ஒட்டவும்.

குறிப்பு.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். ஒன்றின்மேல் ஒன்றாக முத்திரையை ஒட்டக்கூடாது.

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு எனவும் சான்று பகர்கின்றேன். இங்கே ஒட்டப்பட்டுள்ள ........................................... ரூபா பெறுமதியான முத்திரை செல்லுபடியானவை எனவும் முன்னர் உபயோகிக்கப் படாதவை எனவும் உறுதிமொழியளிக்கின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

எனது அலுவலகத்தின் அலுவலரும், நான் தனிப்பட்ட வகையில் அறிந்தவருமான திரு./திருமதி/செல்வி ............................................ ................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

8-235